පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
|---|
| 12 |

மூன்றாம் தவணைப்பரீட்சை - 2023

பாடம்:- சித்திரக்கலை I

பாடசாலையின் பெயர்:-..........................................................................

மாணவர் பெயர் / சுட்டெண்.................................... நேரம் : 03 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள் :**

❖ இஇவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி - I**

➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.

➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**பகுதி - II**

➢ **விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி – I

**• 01 தொடக்கம் 06 வரையாக ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(1) யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறை முத்து மாரியம்மன் கோவில் ஓவியங்களை வரைந்தவர்.

(1) வை. சிவசுப்ரமணியம் (2) நாராயன சுவாமி

(3) கணேஸ்வரச்சாரி (4) பெரியதம்பி சுப்ரமணியம்

(5) அமர்தா ஷேக்கிள் (…...)

(2) போதி கர என்பது.

(1) புத்த சிலை சுற்றி நிர்மாணிக்கப்படும் கட்டடம்˙.

(2) அரச மரத்தை சுற்றி நிர்மாணிக்கப்படும் கட்டடம்.

(3) வஜிராசனத்தை சுற்றி நிர்மாணிக்கப்படும் கட்டடம்.

(4) சிறிய சைத்தியத்தை சுற்றி நிர்மாணிக்கப்படும் கட்டடம்

(5) ஸ்ரீபாதச் சுவட்டை நிர்மாணிக்கப்படும் கட்டடம் (…...)

(3) பண்டைய காலத்தில் போயா தின கருமங்களை செய்யக் கூடும் மண்டபம்.

(1) ஐந்தாகர (2) பதனாகர (3) போதிகர

(4) உபதேச கர (5) ஆசன கர

(…...)

(4) இத்தாலியின் மிலானிலுள்ள புனித மரியா டெலா கிரேசியில் டாவின்சியால் வரையப்பட்ட ஓவியம் எது?

(1) மொனாலீசா (2) பாறைமேற்கன்னி (3) யேசுவின் பரிசம்

(4) கடைசி இராப்போசனம் (5) கடைசி தீர்ப்பு (……)

(5) அனுராபுர ஆட்சிக்காலத்தின் மிகச்சிறந்ததொரு நிர்மாணிப்பான அவுக்கன புத்தர் சிலையினால் எடுத்துக்காட்டப்படுவது.

(1) பல்லவர்களின் கலைப் பண்புகளாகும்

(2) குப்தர்களின் கலைப் பண்புகளாகும்

(3) அமராவதி கலைப் பண்புகளாகும்

(4) மதுர கலைப் பண்புகளாகும்

(5) காந்தாரா கலைப் பண்புகளாகும் (…..)

* **வினா இலக்கம் 06 தொடக்கம் 10 வரை கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை கீழ்தரப்பட்ட 1 தொடக்கம் 8 வரையுள்ள படங்களில் இருந்து தெரிவு செய்க.**




(6) இலங்கையில் வரலாற்றுக்கு முந்திய கால படைப்பாக கருதப்படுவது.

(1) 2 (2) 6 (3) 8 (4) 9 (5) 7 (…….)

(7) காந்தாரக் கலைஞர்களின் திறனை வெளிப்படுத்தும் புத்தசிலை,

(1) 3 (2) 8 (3) 4 (4) 5 (5) 7 (…….)

(8) எகிப்திய நாமர் மன்னரின் பலகை என கருதக்கூடிய படைப்பு.

(1) 2 (2) 8 (3) 9 (4) 3 (5) 5 (…….)

(9) ஐரோப்பிய கலைப்படைப்புகளாக கருதக்கூடியவைகள்

(1) 1,3,7 (2) 6,7,10 (3) 1,5,10 (4) 2,5,6 (5) 6,7,8 (…….)

(10) கனிஸ்க அரசனின் நாணயத்தினை குறியீடாக காட்டும் படைப்பாக கருதப்படுவது.

(1) 2 (2) 8 (3) 9 (4) 6 (5) 3(…….)

* **11 தொடக்கம் 15 வரையான வினாவுக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை A, B, C,D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வருமம் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.**







(11)எழுத்து A இனால் காட்டப்பட்டுள்ள செதுக்கலைக் காணக்கிடைப்பது,

(1) இசுறுமுனியவின் 'ரன்மசு' பூங்காவில் அமைந்துள்ள பாறையில் ஆகும்.

(2) இசுறுமுனியவில் இயற்கையாக அமைந்துள்ள பாறையின் மேற்பகுதியில் ஆகும்.

(3) 'ரன்மசு' பூங்காவிலுள்ள தடாகமொன்றிற்கு அருகில் ஆகும்.

(4) இசுறுமுனிய தடாகத்தில் இயற்கையாக அமைந்துள்ள பாறையில் ஆகும்.

(5) இசுறுமுனிய அரும்பொருட் காட்சியத்தில் ஆகும். (……)

(12)எழுத்து B இனால் காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை மாதிரியினால் காட்டப்பட்டுள்ள தேவாலயம்.

(1) நைல் நதிக் கரையில் ஹோரஸ் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.

(2) தீபசில் நிர்மாணிக்கப்பட்ட லக்ஸோர் தேவாலயமாகும்.

(3) அமொன் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கர்ணாக் தேவாலயமாகும்.

(4) ராம்செஸ் அரசனால் கேத்திர கணித வடிவில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

(5) மத்திய ராசதானிக் காலத்தில் எகிப்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும். (……)

(13)எழுத்து C இனால் காட்டப்பட்டுள்ள புத்தர் சிலை அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டதாகும்.

1) அனுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒரேயொரு இருந்த நிலை புத்தர் சிலையாகும்

2) அபயகிரி விகாரைச் சூழலில் காணப்படும் சமாதி புத்தர் சிலையாகும்

3) கொழும்பு நூதனசாலையில் காணக்கூடிய தொழுவில புத்தர் சிலையாகும்

4) அனுராதபுர புனித பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பன்குலிய புத ்தர் சிலையாகும்

5) சஸ்சேறுவ கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ள சிலையாகும் (..........)

14) எழுத்து D இனால் காட்டப்பட்டுள்ள ஹோட் மாந்தா் எனும் இந்திய காந்தார சிலையின் விசேட அம்சம்.

(1) யதார்த்த தன்மையுடன் செய்யப்பட்ட புத்தசிலையாகும்.

(2) புத்த பெருமானின் ஆன்மீகப் பண்பை சிறப்பாக சித்தரிப்பதாகும்

(3) காந்தார தேசத்தில் செதுக்கப்பட்ட முதல் புத்த சிலையாகும்.

(4) காந்தார தேசத்தில் செதுக்கப்பட்ட நின்றநிலை புத ்தர் சிலைகளுள ் சிறப்பானதொரு நிர்மாணிப்பாகும்.

(5) கிரேக்க அப்பலோ தெய்வத்தை பின்பற்றி நிர்மாணிக்கப்பட்ட நின்றநிலை புத்தசிலையாகும். (........)

15) எழுத்து E இனால் காட்டப்பட்டுள்ள கிரோக்க நிர்மாணத்தின் ஊடகம்

(1) பழமையான கிரேக்கக் மட்பாண்ட கலையில் பயன்படுத்தப்பட்ட கலை நுட்பங்களின் ஒரு பருவத்தினை எடுத்துக்காட்டுகிறது.

(2) கிரேக்க, உரோம கைத்தொழில் கலைகளில் பயன் படுத்தப்பட்ட ரெடீஸ் வகை களியாகும்

(3) கிரேக்கக் மட்பாண்ட கலையில், ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட பண்புகளை எடுத்துக்காட்டுகிறது.

(4) மட்பாண்ட அலங்காரத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க நிர்மாணிப்பாகும்.

(5) கிரேக்கக் மட்பாண்ட கலையின் முன்னேற்றகரமான பருவத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கெரமோஸ் எட்டிக் களிமண் வகையாகும். (.......)

*** 16 தொடக்கம் 20 வரையான வினாவுக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை P,Q,R,S,T எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.**

    

16) எழுத்து P இன் மூலம் காட்டப்படும் சிலை

(1) லூவர் நூதனசாலையில் காணப்படும் சிலையாகும்.

(2) சாந்த மரியா டெலா மாளிகையில் காணப்படும் சிலையாகும்.

(3) சாந்த பீற்றர் செதுக்கத்தில் காணப்படும் சிலையாகும்.

(4) கோலியாத் என்னும் அரக்கனை வென்ற தாவீது எனும் இளைஞனின் சலவைக்கல் சிலையாகும்.

(5) மெடிச்சி குடும்பத்து நினைவு மண்டபத்தில் காணப்படும் சிலையாகும். ( …..)

17) எழுத்து Q இன் மூலம் காட்டியுள்ள இராணி மாளிகை எனவும் அறியப்படும் மகாசென் மாளிகையின் சந்திரவட்டக்கல்

(1) சிறுபுடைப்புச் செதுக்கல்களில் ஒன்று

(2) பிராணிகளின் உருவங்கள் உள்ளடக்கி செதுக்கப்பட்ட செதுக்கல்

(3) சலனம், ரிதம், மென்மையான பூரணப்பாட்டைக் கொண்ட செதுக்கல்

(4) அரைவட்டக் கருங்கல் தகட்டுச் செதுக்கல்

(5) கற்சிற்பியின் சிறப்பான நிர்மாணிப்பு (……)

18) எழுத்து R இன் மூலம்காட்டப்படும் படக்குறிப்பில் சித்தரிக்கப்படுவது

(1) புதிய எகிப்திய மரபுக்கமைய செதுக்கப்பட்ட சிலைத்தொகுதியாகும்

(2) பேரோ ஒருவரையும் அவரது மனைவி ஒருவரையும் வெளிக்காட்டுகின்ற மரபுரீதியான

செதுக்கலாகும்

(3) கப்றே என்னும் பெயரில் இனங்காணப்படும் செதுக்கலாகும்.

(4) மென ் குரேயும் அவரது மனைவியம் என இனங்காணப்படும் செதுக்கல்

(5) பூஜைக்கு ஆயத்தமாகும் பேரோவும் அவரது மனைவியையும் காட்டும் செதுக்கல் (.......)

19) எழுத்து S இன் மூலம் காட்டப்பட்டுள்ள பாரதத்தின் மதுராக்கலை மரபிற்குரிய

(1) தக்திபஹி புத்தர் சிலையாகும்.

(2) துஸ்தரக்கிரியாவ புத்தசிலையாகும்.

(3) சஹ்ரி பகலொல் புத்தர் சிலையாகும்.

(4) பிரெகம் புத்தர் சிலையாகும்.

(5) கத்ரா புத்தர் சிலையாகும். (……)

20) T எனும் எழுத்தின் மூலம் தொல்சீர வர்ணப் பயன் பாட்டைக் கொண்ட ஆக்கம்.

(1) ஹரி பீரிசினால் வரையப்பட்ட இந்திராணி எனும் ஓவியமாகும்.

(2) ஜஸ்டின் தரனியகலவின் நிர்மாணமாகும்.

(3) திஸ்ஸ ரனசிங்கவின் தலைசீவும் பெண் ஓவியமாகும்.

(4) ஹரி பீரிசின் ஜைன பவன ஓவியமாகும்.

(5) ஜஸ்டின் தரனியகலவின் பெண் பிள்ளை எனும் ஓவியமாகும். (……)

*** 21 தொடக்கம் 25 வரையான வினாவுக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை U, V,W,X,Y ஏனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.**


U


V


W


X


Y

21) U எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம்

(1) H. A கருனாரத்தினாவினால் ஆக்கப்பட்டது

(2) டேவிட் பெயின்டரினால் ஆக்கப்பட்டது

(3) அமரசேகர முதலியாரினால் ஆக்கப்பட்டது

(4) சோமபந்து வித்தியாபதியினால் ஆக்கப்பட்டது

(5) LTP. மஞ்சுசிறியினால் ஆக்கப்பட்டுது (.......)

22) V எழுத்தினால் காட்டப்பட்டுள்ள புத்தசரிதையுடன் தொடர்புபட்ட ஓவியம்.

(1) அல்பேட் தரம்சிறியினால் சேதவன்னே பான்சாலையில் வரையப்பட்ட சித்திரம்

(2) எம். சார்லிஸ் இனால் திம்பிரிகஸ்யாவில் உள ் ள அசோகராமயத்தில் வரையப்பட்ட சித்திரம்

(3) சோழியஸ் மெண்டிஸ்சினால் கிரியுள ்ள மத்தேபொல விகாரையில் வரையப்பட்ட சித்திரம்

(4) மஞ்சுசிறியினால் வரையப்பட்ட பௌத்த சித்திரம்

(5) சோமபந்து வித்தியாபதியினால் வரையப்பட்ட பெல்லன்வில விகாரை ஓவியம் (.........)

23) W எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பைசான் எருதுகளைக் காட்டும் ஓவியம்,

(1) பில்லாவ குகையில் வரையப்பட்டுள்ளது.

(2) லாஸ்கோ குகையில் வரையப்பட்டுள்ளது.

(3) அல்ராமீரா குகையில் வரையப்பட்டுள்ளது.

(4) பொன்டித கோமே குகையில் வரையப்பட்டுள்ளது.

(5) கோகுல் குகையில் வரையப்பட்டுள்ளது. (…….)

24) X எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பிரதிமை ஓவியம்,

(1) தனிநபர் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.

(2) கீழைத்தேய கலை நியதிகளைப் பின்பற்றி நிர்மாணிக்கப்பட்டதாகும்.

(3) மனப்பதிவுவாத கலைப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

(4) பின்மனப்பதிவுவாத ஓவிய மரபின் பண்புகளைச் சித்திரிப்பதாகும்.

(5) சாஸ்திராலய யதார்த்தவாத ஓவிய மரபுக்கமைய வரையப்பட்டதாகும். (.........)

25) Y எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம் காணப்படும் இடம்

(1) வத்திக்கான் சிஸ்ரைன் தேவாலய உட்கூரை

(2) வத்திக்கான் சிஸ்ரைன் தேவாலய பலீபீடச் சுவர்

(3) உரோம் சென் பீற்றர் தேவாலய பலீபீடச் சுவர்

(4) மிலன் சாந்தா மரியா மடலாயச் சுவர்

(5) வத்திக்கான் ஸ்ரென்சா டெலாசிக்னா நசுரா கட்டட சுவர் (.......)

* **26 தொடக்கம் 30 வரையாக ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருந்தமான விடையைத் தெரிவு செய்க.**

26) சந்தைக்கு பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்படும் சுவரொட்டியொன்றில் மிக முக்கியமாக அமைவது.

(1) வடிவங்களையும் வர்ணங்களையும் குறியீட்டு ரீதியாகப் பயன்படுத்தலாகும்.

(2) தொனிப்பொருளுக்குப் பொருத்தமான சுருக்கமான வாசகமொன்றைப் பயன்படுத்துதலாகும ்.

(3) நோக்கங்களை எளிமையாகவும் சிக்கலின்றியும் அர்த்தமுள்ள விதத்திலும் விரைவாகவும் வெளிப்படுத்தல் ஆகும்.

(4) குறியீட்டு ரீதியான உருவங்களை தளத ்துக்கும் வெளிக்கும் பொருந்தும் விதத்தில் திட்டமிடுதலாகும்.

(5) சிறந்த நிறையைக் கொண்டதாக வர்ணமயமாக நிர்மானிப்பதாகும். (…..)

27) ஓவியமொன்றுக்கு வர்ணம் தீட்டும் போது ஓவியரொருவர் அழுத்தம் கொடுப்பது.

(1) மனங்கவர் தன்மைக்காகும்.

(2) தொனிப்பொருளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகும்.

(3) கலைநுட்ப பண்பாட்டிற்காகும்.

(4) தனக்கேயுரித்தான பாணிக்காகும்.

(5) பொருள்களை யதார்த ்த பூர்வமாகக் காட்டுவதற்காகும். (…..)

28) ஆகாய தூரநோக்கு என்பது

(1) கடலின் ஆழப்பகுதியில் உள்ள கப்பலில் இருந்து தெரியும் தூரக்காட்சி

(2) கீழிருந்து மலையில் உச்சியில் தெரியும் தூரக்காட்சி

(3) புகையிரதத் தண்டவாளத்தை நோக்கும்போது தெரியும ் தூரக்காட்சி

(4) தாழ்வாக பறக்கும் விமானத்தில் இருந்து கீழ்நோக ்கி தெரியும் தூரக்காட்சி

(5) படுத்திருந்து ஆகாயத்தை பார்க்கும்போது தெரியும் தூரக்காட்சி (......)

29) கலை நிர்மானிப்பில் ஒருமைப்பாடு (ருவைெல) என்பது.

(1) ஒத்த வர்ணங்களைப் பயன்படுத்துவதாகும்.

(2) மன ஒருமைப்பாட்டை வடிவமைத்தலாகும்

(3) குழுச் செயற்பாட்டின் மூலம் வடிவமைத்தலாகும ்

(4) கட்புல வெளிப்பாடுகள ் ஒட்டு மொத்தமாக ஒன்றித்து செயற்படலாகும்.

(5) புதுப ்புது கலைப்பாணிகளில் சங்கமிப்பாகும். (…..)

30) நீர் வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தும் ஓவியத்தில் இருக்க வேண்டிய சிறப்பான பண்பு

(1) தளம் முழுவதும் நிறம் சமநிலையில் பரவப்பட்டிருத்தல்

(2) நீருடன் கலக்கப ்பட்ட நிறம் தூரிகை அடிப ்பு இருப்பது போல தடித ்த நிறப் பிரயோகம்

(3) ஊடுகாட்டும் முறையிலான நிறங்கள் நீருடன் கலக்கப்பட்டிருக ்கும் வித த ்தைப் பிரதிபலித்தல்

(4) வெள ்ளை நிறம ் பயன்படுத்தப்படுவதால் நிறங்களின் வன்மை, மென்மை காட்டப்பட்டிருத்தல்

(5) மூலவர்ணங்களில் தடயங்கள் தெளிவாக தெரிதல் (…..)

* **31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள கலை நிர்மாணிப்புகளின் உருவப ் படங்களை அடிப ்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**

31) அருகில் காட்டப்பட்டுள்ள இசுருமுனியாவில் உள்ள கற்பாறையில் செதுக்கப்பட்ட செதுக்கல்,



(1) கலைப் பாணியுடன் கூடிய பண்பினை சித்தரிக்கும் புடைப்பு செதுக்கல்.

(2) இயற்கை கற்பாறையின் அமைப்பை உபயோகித்து செதுக்கப்பட்டுள்ள உயர் புடைப்பு நிருமாணிப்பு.

(3) யானைகளின் இயற்கையான செயற்பாட்டு அசைவுகளை சித்திரக்கின்ற புடைப்பு நிருமாணிப்பு.

(4) நீரைப் பெறுவதன் பொருட்டான குறியீட்டை வெளிக்காட்டும் உயர் புடைப்பு நிர்மாணிப்பாகும்.

(5) யானைகளின் இயற்கையான மெய் நிலைகளைச் சித்தரிக்கும் முழுமைப் புடைப்பு செதுக்கலாகும். (……)

32) அருகில் காட்டப்பட்டுள்ள கற்பலகையானது.



(1) புத்த சரிதையுடன் தொடர்புடைய நிகழ்வொன்றைச் சித்தரிக்கும் பாருத் செதுக்கலாகும்.

(2) புத்த சரிதையுடன் தொடர்புடைய நிகழ்வொன்றைச் சித்தரிக்கும் அமராவதி கலைஞரின் ஆக்கமாகும்.

(3) வரலாற்று செய்தியொன்றைச் சித்தரிக்கும் பாருத் செதுக்கலாகும்.

(4) அமாராவதி தூபிகளிடையே காணப்படும் பலகைச் செதுக்கல்களில் ஒன்றாகும்.

(5) சாஞ்சி தூபியின் தூண் செதுக்கல்களில் பெறுமதிமிக்கதொன்றாகும். (……)

33) அருகில் காட்டப்பட்டுள்ள பாரூத் சைத்திய செதுக்களில் காணப்படும் இச் செதுக்கல்.



(1)பௌத்தத்தில் வரலாற்று நிகழ்வொன்றை சித்திரிக்கும் பெறுமதிமிக்க செதுக்கல்

(2)இந்தியாவின் சைத்தியச் செதுக்கல்களில் சிறப்பான செதுக்கல்

(3)ஒரு தொடர் கதையைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு கலையம்சம் மிக்க செதுக்கல்

(4)புத்தபெருமானது ஆன்மீகத் தன்மையைக் காட்டும் உயர்தரச் செதுக்கல்

(5) தூபியின் கல்வேலியுடன் இணைந்த புத்தர் பெருமானின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் வட்டமான செதுக்கல் (……)

34) இங்கு காட்டப்பட்டுள்ள ஓவியப் பகுதி



(1) எகிப்திய ஓவியத்தின் பகுதியாகும்.

(2) கிரேக்க ஓவியத்தின் பகுதியாகும்.

(3) மொகலாய ஓவியத்தின் பகுதியாகும்.

(4) அஜந்தா ஓவியத்தின் பகுதியாகும்.

(5) கண்டிய ஓவியத்தின் பகுதியாகும் (…….)

35) அருகில் காட்டப்பட்டுள்ள மட்பாண்டம்



(1) கிரேக்க காலத்திற்குரியது.

(2) எகிப்திய காலத்திற்குரியது

(3) சிந்துவெளி காலத்திற்குரியது.

(4) உரோமானிய காலத்திற்குரியது.

(5) அனுராதபுர காலத்திற்குரியது. (…....)

*** வினா இல 36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக கேட்கப்படும் வினாவிற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் இடுக.**



36)இந்த ஓவியம்

(1)தீபஸ்ஸிலிலுள்ள புதை குழியிலிருந்து
(2)கீஸாவிலிலுள்ள கோயில் ஒன்றிலிருந்து கண்டறியப்பட்டதாகும்.
(3)மத்திய இராசதானி காலத்தில் வரையப்பட்டதாகும்.
(4)அமர்ணாவிலிலுள்ள புதைகுழியிலிருந்து கிடைத்ததாகும்.
(5)புராதான இரசாதானி காலத்திற்குரியதாகும். (……)

37)இந்த ஓவியத்தின் கருப்பொருளாக அமைந்தது
(1)பிரபு ஒருவர் தனது தேஜஸ், அதிகாரபலம் ஆகியவற்றை வெளிப்படுத்துபவராகும்
(2)பப்பிரஸ் மரங்களுக்கிடையில் வேட்டையாடுதலில் ஈடுபட்டிருக்கும் அரசன் ஒருவனின் செயற்பாடாகும்.
(3)பிரபு ஒருவர் தனது குடும்பத்தினருடன் படகொன்றில் ஏறி பறவை வேட்டையில் ஈடுபட்டிருத்தலாகும்.
(4)பிரபுக்கள் சோடியொன்று சூழலில் வனப்பை அனுபவிக்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.
(5)பிரபுக்கள் குழுவொன்று பப்பிரஸ் மரங்களுக்கிடையே படகுச்சவாரியில் ஈடுபட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பமாகும். (……)

38)இந்த ஓவியத்தை ஒழுங்கமைக்கும் போது
(1)தூரதரிசனம், முப்பரிமாண இயல்புகள் என்பன கவனத்தில் கொள்ளப்படவில்லை.
(2)மனித உருவங்களும் பிராணிகளின் உருவங்களும் முழுப்பரப்பிலும் பரவல் அடையும் விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன.
(3)கருப்பொருளுக்கு பொருத்தமான விதத்தில் வடிவங்களுக்கிடையிலான தொடர்பு பேணப்படுமாறு உருவங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
(4)பிரதான பாத்திரத்தைப் போன்று ஏனைய பாத்திரங்களும் மிகப்பெரிதாக காட்டப்பட்டுள்ளன.
(5)இயற்கையானதும், மரபுரீதியானதுமான வடிவங்கள் பரப்பு முழுவதும் சமனிலையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. (……)

39)இந்த ஓவியத்தை வரையும் போதும் வர்ணமிடும் போதும்
(1)மரபு ரீதியான கோடுகளும் வர்ணக்கோலங்களும் பின்பற்றப்பட்டுள்ளன.
(2)பிராணிகளின் உருவங்கள் இயற்கையாகவும் மனித உருவங்கள் மரபுரீதியாகவும் வரையப்பட்டுள்ளன.
(3)குளிர் வர்ணங்களுக்கு முன்னுரிமையளித்து உருவங்கள் விபரமாக வரையப்பட்டுள்ளன.
(4)வர்ணங்களும் கோடுகளும் சமனிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(5)குளிர் வர்ணங்களும் வெப்ப வர்ணங்களும் சிறப்பாக பொருந்துமாறு வர்ணங்களும்

வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. (......)

40)இவ்ஓவியம் பற்றி ஆராயும் போது

(1)கலைஞர் சுதந்திர வெளிப்பாட்டிற்கும் நிலவிய மரபுகளுக்கும் இடையில் சிக்குண்டுள்ளமை தெரிகின்றது.

(2)எகிப்திய பிரபுகளுக்கும் இயற்கைக்கும் இடையே நடைபெறும் போராட்டம் தெளிவாகின்றது.

(3)மரம்,செடி,கொடிகள் பிராணிகள் விலங்குகளை விட பிரபுக்கள் அதிகாரம் பொருந்தியவர்கள் என்பது தெளிவாகின்றது.

(4)ரம்மியமான இயற்கை வனப்பை இரசிப்பவர்கள் பற்றிய விபரிக்கப்படுகின்றது.

(5)மனிதர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கு அழகிய இயற்கை இரையாகியுள்ளமை தெரிகின்றது. (......)

## பகுதி II

* இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது
* **அ** பகுதியிலிருந்து **இரு** வினாவும், **ஆ, இ** பகுதிகளில் இருந்து **ஒரு** வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

உப பகுதி ‘அ’

(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

01) பொலநறுவைக்காலத்தில் பல்வேறு பௌத்த இந்து கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

(i) பொலநறுவைக்கால இந்து சமயக்கட்டடங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) நிசங்கலதா மண்டபத்தின் அமைப்பு ,அழகியல் பண்புகளை சுருக்கமாக விமர்சிக்குக. (05 புள்ளிகள்)

(iii)பொலநறுவைக்கால பௌத்த சிலைமனைகளில் திராவிடக்கட்டடக்கலை மரபுகள் காணப்படுகிறது உதாரணம் தந்து விமர்சிக்குக. (08 புள்ளிகள்)

02) சித்திரக்கலை தொடர்பில் நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கையில், சித்திரக் கலையின் விளக்கமான வளர்ச்சியைக் காணக்கிடைப்பது அநுராதபுரக் காலத்திலாகும்.

(i) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் காணப்படும் இரண்டு இடங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) ஹிந்தகலையில் வரையப்பட்டுள்ள சுவரோவியங்கள் பற்றி சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) சிகிரியா சித்திரத்தினுள் அன்றைய சித்திரக்கலைஞர்களிடம் இருந்த ஆக்கபூர்வத் திறமை சிறப்புற வெளிப்படுகின்றது. சிகிரியாச் சித்திரங்களில் பயன்படுத்திய நுட்பமுறையை வெளிப்பாட்டினூடாக விளக்குக. (08 புள்ளிகள்)

03) அனுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கற்தகட்டுச் செதுக்கல், அதன் பிந்திய யுகங்களில் உருவான தகட்டுச் செதுக்கல்களிலும் பார்க்கக் கூடிய கலைத்துவத் தன்மையும் மிகச் சிறந்த பூரணத்துவத்தையும் கொண்டதாகும்.

(i) காவற்கல் செதுக்கல்களில் காணப்படும் குறியீடுகள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவற்றால் வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிறுபுடைப்புத் தகட்டுச் செதுக்கலான சந்திரவட்டக்கல்லின் செதுக்கல்களில் காணப்படுகின்ற நுட்பத்திறன் பற்றி, அலங்கரிப்பு அலகுகளைக் கொண்டு சுருக்கமான மதிப்பீடு ஒன்றைச் செய்க. (05 புள்ளிகள்)

(iii)இசுருமுனியாவில் உள்ள காதலர் சிற்பம் மூலம் வெளிப்படுத்தப்படுவது உண்மையில் இளம் காதல் என்றால் அதை வெளிப்படுத்துவதன் பொருட்டு கலைஞர் எடுத்த முயற்சி வெற்றி பெற்றுள்ளதா? உமது கருத்தை வெளிப்படுத்தி இது பற்றி விமர்சனம் செய்க. (08 புள்ளிகள்)

உப பகுதி ‘ஆ’

(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

04) கி.பி முதலாம் நூற்றாண்டில் காந்தார தேசத்தில் பரவிய பௌத்த கலை மரபானது கீழைத்தேய மேலைத்தேய பண்பாட்டுக்களின் ஒரு கலப்பாகும்.

(i) காந்தராரக் கலைஞர் புத்த வடிவத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக்க கொண்ட

மேலைத்தேயக் கலைமரபும், கலைப் படைப்பும் எது? (02 புள்ளிகள்)

(ii)காந்தாரத்தில் உருவாக்கப்பட்ட பெருமளவு சிலைகள் இயற்கையான தோற்றமுடையன அவற்றுள் மிக அதிகளவு இயற்கையான தோற்றமுடைய துஸ்தரகிரியாவ சிலையின் இயல்பினைச் சுருக்கமாக விவரிக்க. (05 புள்ளிகள்)

(iii) ‘‘காந்தாரக் கலை மரபின் சமகாலக் கலைமரபான மதுராக கலை மரபிலும் புத்தர்சிலை உருவாக்கப்பட்டது. இருப்பினும் மதுரா புத்தர் சிலையில் காந்தார சிலைகளைவிட ஆத்மீக குணவியல்புகள் அதிகமாக காணப்படுகிறன்றது. உதாரணத்துடன் விளக்குக. (08 புள்ளிகள்)

05) 19 நூற்றாண்டுகளில் இந்தியாவின் ஓவிக்கலைஞர்கள் பலர் பல்வேறு மேலைத்தேயக் கலை மரபுகளை விடுத்து சுதேசிய கலைமரகளில் ஓவியங்களாக்கினர்.

(i) அபினிந்திர நாத் தாகூரின் இரு ஆக்கங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இந்திய ஓவிய மறுமலர்சியின் பின்னணி பற்றிச் சுருக்கமாக அறிமுகஞ்செய்க.(05 புள்ளிகள்)

(iii) நந்தலால் போஸின் நஞ்சுண்ட சிவன் ஓவியத்தை மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

உப பகுதி ‘இ’

(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

06) உன்னத கலைஞர்களின் படைப்பாற்றலால் இத்தாலியில் ஓவியத்துறை சார்ந்த மறுமலர்ச்சி ஏற்பட்டது.

(i) மைக்கல் ஆஞ்சலோவின் சிற்பங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) ராபாயலின் ‘‘பர்னாஸ்சோ ’’ என்ற ஓவியத்தை சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii)சிஸ்ரையின் தேவாலய முகட்டின் தளம் முழுவதும் ஒரு அலங்காரத்தைக் கொண்ட அமைப்பில் திட்டமிட்டு உள்ள தன்மையையும் அதன் கருப்பொருளையும் விளக்குவதுடன் நிர்வாண மனித வடிவமைப்புக்களைக் கருத்துடன் பயன்படுத்தி உள்ள தன்மையையும் உதாரணத்துடன் விளக்குக (08 புள்ளிகள்)

07) எளிய கேத்திர கணித உருவங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட கிரேக்கச் சிற்பக்கலை, கலைஞர்கள் முதிர்ச்சியடைந்ததும் உன்னத நிலையை எய்தியது.

(i) கிரேக்க கால மட்பாண்ட வகைகள் இரண்டை பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) கிரேக்க கட்டடக்கலையை அலங்கரித்த மூன்று வகையான தூண்களையும் சுருக்கமாக அறிமுகம் செய்க (05 புள்ளிகள்)

(iii)கிரேக்க கட்டடக்கலைக்கு சிறப்பான எடுத்துக்காட்டாக விளங்கும் பாதீனன் ஆலயத்தின் கட்டடக்கலை நுட்பங்கள், மற்றும் அலங்கரிப்புகள் தொடர்பாக விமர்சிக்குக. (08 புள்ளிகள்)

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 12

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023

பாடம்:- சித்திரக்கலை II

பாடசாலையின் பெயர்:-......................................................................................

மாணவர் பெயர் / சுட்டெண்.......................................... நேரம் : 3 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள் :**

* உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
* விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையயளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக்கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்

* பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.
* கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
* பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
* பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
* வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
* பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
* நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(100 புள்ளிகள் )

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 12

மூன்றாம் தவணைப்பரீட்சை - 2023

பாடம்:- சித்திரக்கலை II

பாடசாலையின் பெயர்:-..............................................................................

மாணவர் பெயர் / சுட்டெண்........................................ நேரம் : 3 மணித்தியாலம்

**இரகசியமானது**

சித்திரப்பாட ஆசிரியர்களுக்கானது



❖ தேவையான பொருட்கள்

1. குரோட்டன் கிளை 5 இலைகள்
2. உரித்த தேங்காய்
3. தடித்த அகராதி
4. 45cm x 45 cm துணி (அச்சிட்ட)
5. பிளாஸ்டிக் ஜக் 12cm சராசரி உயரமான
6. ஆதாரப்பலகை

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 12

மூன்றாம் தவணைப்பரீட்சை - 2023

பாடம்:- சித்திரக்கலை III

பாடசாலையின் பெயர்:-...........................................................................

மாணவர் பெயர் / சுட்டெண்......................................... நேரம் : 3 மணித்தியாலம்

**கவனிக்க :**

* நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.
* உங்கள் சுட்டெண்ணையும் உரிய வினா இலக்கத்தையும் விடைத்தாளின் பிறபக்கத்தில் உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.
* விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.
* வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக்கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று) வரைவதற்கு வெள்ளைத் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத் தாளும் வழங்கப்படும்.

**“அ”, “ஆ”, “இ” பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

**பகுதி “அ”**

**சித்திர ஒழுங்கமைப்பு**

01) மர நிழலில் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் துறவிகள்
02) சரணாலயப் பூமியில் மிருகங்களைப் பார்வையிடுவோர்
03) மீன் பிடித்து எடுத்துவரும் மீனவர்கள் கரைக்கு திரும்புதல்
04) சுவாரசியமாக உரையாடலில் ஈடுபட்டிருக்கும் பெண்கள்

**பகுதி “ஆ”**

**அலங்கார ஆக்கம்**

05) அலரிப் பூக்களையும் இலைகளையும் விருப்பப்படி ஒழுங்குமுறையில் பயன்படுத்தி சீத்தைத் துணி ஒன்றுக்குப் பொருத்தமான பரவுருப அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.
06) நவீன பாணியிலான பிராணியொன்றின் வடிவத்தைக் கொண்டு பற்றிக் முறையில் வர்ணமிடுவதற்குப் பொருத்தமான 10 X 7அடி அளவிலான சுவர் அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.
07) சேலை முந்தானைக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றைப் பாரம்பரிய அலங்கரிப்பு அலங்காரங்களிலிருந்து நிர்மாணிக்குக.

**பகுதி “இ”**

**கிறபிக் சித்திரம்**

08) ‘‘நாம் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்’’ என்ற தலைப்பில் வர்ண போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.
09) பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது விநியோகிக்கப்படுகின்ற கையேட்டின் முன் பக்கத்தை அலங்கரிப்பதற்கான கிறபிக் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.
10) நாட்டின் பிரசித்தி பெற்ற கலைஞர் ஒருவரின் பிறந்தநாள் வாழ்த்துக்கான வாழ்த்துமடல் ஒன்றை நிர்மாணிக்குக.

(100 புள்ளிகள் )

# LOL.lk BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින් නිවසටම ගෙන්වා ගන්න






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර, කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**